# பல்கலைக்கழக மாணவர் வேலை நிறுத்தம் நீடிக்கிறது

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 · போன் 389

National Tamil Daily

மலர் 9. இதழ் 359 · தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 12 ஷஃபான் 25 செவ்வாய்க்கிழமை [28-11-67

கொழும்பு, திங்கள்
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவு. சட்டப் பிரிவு, விஞ்ஞானப்பிரிவு, வைத்தியப்பிரிவு ஆகியன வற்றைச் சேர்ந்த சுமார் 6000 மாணவ மாணவிகள் நேற்று முன்தினம் நண்பகலிலிருந்து 'வேலை நிறுத்தம்' செய்துவருகின்றனர். இரவு பகலாக அவர்கள் தொடர்ந்து உள்ளிருப்புவேலை நிறுத்தம் செய்கின்றனர்,

கொழும்புப் பல்கலைக்கழகம் இலங்கைப்பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றப் படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

''கொழும்பு'புல்கலைச்கழகம்'' என்பது ''இலங்கைப் பல்கலைக் கழகம்'' என்று பெயர் மாற்றப்படும் என்று பிரதமர் திரு. டட்லி சேனநாக்கா ஏற்கனவே அறிவித்திருப்பினும், அவர் தமது வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றாதபடியால் தாங்கள் இப்பொழுது வேலை நிறுத்தம் செய்வதாக இப் பல்கலைக்

[8-ம் பக்கம் பார்க்க)

# பதுக்கல், கொள்ளைலாபம்: இனி சிறைத்தண்டனை

## அவசரகாலசட்டத்தின் கீழ் நடவடிக்கை

கொழும்பு, திங்கள்
பதுக்கல், கொள்ளை லாபத்துக்கு இனிச் சிறைத்தண்டனை கிடைக்கும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் இப்புதிய உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமையை வர்த்தகர்கள் பலர் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, பதுக்கல், கொள்ளை லாபம் ஆகியவைகளில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இப்போதுள்ள சட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருள்களைப் பதுக்கிவைப்போருக்கும் கொள்ளை இலாபம் அடிப்போருக்கும் அபராதம் அல்லது சிறைத்தண்டனை விதிக்க முடியும். அபராதத்தொகையைச் செலுத்தியதுடன் அவர்கள் தப்பிவிடமுடியும். அபராதத்துடன் தப்பிவிடுவதால்தான் பதுக்கலும் கொள்ளைலாபமும் அதிகரித்துவருவதற்குக் காரணம் என்று அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்தே அவசரகாலச் சட்டத்தின்கீழ் பதுக்கல், கொள்ளை லாபம் ஆகியவைகளில் ஈடுபடுவோருக்குச் சிறைத் தண்டனை விதிக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### யாழ். மாவட்டத்திலிருந்து

## மோட்டார் லைசென்ஸ் மூலம் சுமார் 50 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் மட்டும் பஸ், லொறி, டிராக்டர் கார் மோட்டார் சைக்கிள்கள் ஒட்டுவதற்கு 1250பேருக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது, இதனால் 48,660ரூபா அரசாங்கத்திற்கு முத்திரைப் பணமாகக் கிடைத்துள்ளது.

கடந்தவருடத்தில் கார், மோட்டார்சைக்கிள், டிராக்டர் ஆகியனவற்றை ஓட்டும் லைசென்ஸிற்காக 1319 பேர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் 954 பேர் மட்டும் பரீட்சையில் சித்தியடைந்து லைசென்ஸ் பெற்றனர். பஸ், லொறி, வாடகைக்கார்களை ஓட்டுவதற்கு லைசென்ஸ்பெற 989பேர் விண்ணப்பித்திருந்தனர். இதில் 296 பேர் மட்டும் பரீட்சையில் சித்தியடைந்து லைசென்ஸ் பெற்றுள்ளனர்.

மற்றைய வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் கூடுதலானவர்களுக்கு இங்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளதாம்

(ந.நி)

## தொழில்நுட்ப ஊழியர் வேலைநிறுத்தம்செய்யவில்லை

யாழ்ப்பாணம், செவ்.
அகில இலங்கையைச் சேர்ந்த தந்தி, டெலிபோன் ஊழியர்கள் நள்ளிரவுமுதல் வேலை நிறுத்தத்திலிறங்கியுள்ளார்கள். இருந்தபோதிலும் தபால் தந்தி வானொலிப்பகுதியைச் சேர்ந்த சுமார் 90 தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தபால் தந்தி வானொலிப்பகுதி நுட்பதொழிலாளர்சங்கத்தலைவர் திரு. சிவராஜும் செயலாளர் திரு. குமாரசாமியும் கூட்டாகவிடுத்திருக்கும் அறிக்கையொன்றில் இவ் வேலை நிறுத்தத்தில் தமது சங்கம் கலந்துகொள்ளவில்லையென்றும் நாடுபூராவும் 'றேடியோ', 'வயலர்ஸ்' 'டெலிபிரின்டர்', 'ஒட்டோ எக்சேஞ்ச்'வேலைகள் வழமைபோலவே நடைபெறுமென்றும் அறிவித்துள்ளனர்.

சிறுஊழியர்களும் நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

### யாழ்ப்பாணத்தில்

அகில இலங்கையிலும் இந்த வேலை நிறுத்தம்நடைபெற்ற போதிலும் யாழ்ப்பாணம் தந்திப்பகுதி பிரதம பொறியியலாளர்இன்று கடமையாற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இங்

[8ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு பரிசோதகருக்கு சிங்களத்தேர்வு தேவையில்லை?

### ஆராய்வதாக கமிஷனர் உறுதி

உடுப்பிட்டி, திங்கள்
அகில இலங்கைக் கூட்டுறவு ஆய்வாளர் கழகத் தலைவர் திரு. ஆர். ஜேசுதாசனும் பொதுச் செயலாளர் திரு. மு. ஜெயராசசிங்கமும் சென்ற 24-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த கூட்டுறவு ஆணையாளர் திரு. பி.ஏ. சில்வாவைச் சந்தித்துத் தமிழ்க் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி தேவையில்லையென்றும், அவர்களை இக் கஷ்டத்திலிருந்து விலக்கும்படியும் வற்புறுத்தினர். இப்பேச்சு வார்த்தையின்போது ஆணையாளருடன், சிரேஷ்ட ஆணையாளர் திரு. கே.எஸ். பொன்னுத்துரையும், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எம். பதிபால சிங்கமும் கூட இருந்தனர்.

நாயக்காவுடன் தொடர்பு

இத்தூதுக் குழுவின் பேச்சு வார்த்தைகளின்முடிவில் திரு. சில்வா தமிழ்க் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி தேவையில்லையென்று ஒத்துக்கொண்டதாகவும், தான் கொழும்பிற்குச் சென்று இப்பிரச்னை பற்றித் தீர்க்கமாக ஆராய்ந்து ஆவனவற்றைச் செய்வதாக உறுதி அளித்ததாகவும் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக மேற்படி சங்கம் உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் உதவியுடன் நிதி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் சிங்கப்பூர் துணி உரிமையாளரும் கைது

### தீர்வைகட்டியும் திருப்தியில்லையாம்

சங்கானை, திங்கள்
சிங்கப்பூர் துணி ஆனையிறவில் பிடிபட்டது.

சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த எஸ். இராசலிங்கம் என்பவருக்கு சிங்கப்பூரிலிருக்கும் அவரது சகோதரர் இரு சேலைகளை அனுப்பியதாகவும் சங்கானைத் தபால்நிலையத்தில் அதற்கான சுங்கத் தீர்வை 79ரூ. 20 சதம் செலுத்திப் பெற்றுக் கொண்டு தற்பொழுது தாங்கள் வசிக்குமிடமான அக்கராயன் குளத்திற்குப் பஸ்ஸில் பிரயாணஞ் செய்தபோது ஆனையிறவு தடைமுகாமில் சோதனையிடப்பட்டதாகவும் சேலைகளைக்கண்டெடுத்த அதிகாரிகள் திரு. இராசலிங்கத்தைக் கைது செய்து சேலைகளையும் பறிமுதல்செய்ததாகவும் தெரிகிறது.

இராசலிங்கம் தக்க ஆதாரங்கள் காட்டி எவ்வளவோ கூறிய போதும் அவரது முயற்சிகள்பயனளிக்கவில்லையாம்.

சங்கானைப் பொலிசாரும், சங்கானை தபால் நிலையத்தினரும் இது சம்பந்தமான முழு விபரங்களையும் ஆனையிறக்குத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## யாழ். நகரில் தொழிற் பயிற்சிக் கல்லூரி

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாணம் பண்ணையில் அரசாங்கம் அமைக்க உத்தேசித்திருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பிரிவு குருநகர் றெக்ளமேஷன் பகுதியில் அமைப்பக்பட்டிருப்பதாக நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது.

றெக்ளமேஷனிலுள்ள ஓர் ஏக்கர் காணியில் இதற்கான கட்டட வேலைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிகின்றது.

பண்ணையிலுள்ள இந்தக் காணியில் தொழிற் பயிற்சிக் கல்லூரிக் கட்டடத்தை அமைக்கவும் தொழில் அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளதாக தொழில் இலாகாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி தெரிவித்தார். இப் பயிற்சி நிலையத்தில் 18 விதமான தொழில்களில் படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். [ந, நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

மனேஜர்

கூட்டுறவுப் பயிற்சியும் வியாபார அனுபவமும் உடையவரும் ரொக்கம் ரூபா 1000/-, ஆதனம் ரூபா 2000/ பிணைப்பணம் கட்டக்கூடிய மனேஜர் தேவை. விற்பனையாளர் உட்பட வேதனம் ரூ. 150/- 15-12-67-க்கு முன் புத்தூர் ஐக்கிய பண்டகசாலை தலைவருக்கு விண்ணப்பிக்கவும். 2153

ஆசிரியர்:

ஜி ஏ கியூ. மாணவருக்கு தத்துவம் படிப்பிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. விளம்பரஇல. 2151. மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2151

## காணவில்லை

கூப்பன்கள்

எனது P. 673786 தொடக்கம் 673790 என்ற இலக்கம் வரையுள்ள அரிசிக் கூப்பன்களுடன் இணைந்த ஆறு கூப்பனகள் சுன்னுகச் சந்தைக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் டொக்டர் எஸ். நவரத்தினம், அரசினர் வைத்தியசாலை, சுன்னுகம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2573

## கல்வி

தமிழ். ஆங்கிலம், சிங்களம் மூலம் சிறுவர் ஆரம்ப கல்வி பெறவும், பெண்கள் ஆங்கிலம், சிங்களம் கற்கவும் தேசிய சிறுவர் பாடசாலையில் உடனே சேருங்கள். 460, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி. 2149

## 'யாழ்ப்பாணத்தில் மீன்பிடி நிலையம் நிறுவுக'

யாழ்ப்பாணம, செவ்வாய் யாழ்ப்பாணத்தில்ஒரு மீன்பிடிப் பயிற்சி நிலையத்தை நிறுவவேண்டிய நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான திரு. எம். ஜே. பெரேராவை வேண்டியுள்ளார். இங்கு மீன்பிடி நிலையமொன்று அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி குருநகர் கலைக்கழகத்தினர் யாழ்ப்பாணம் எம். பியைக் கேட்டிருந்தனர். [ந. நி.]


மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
6-30 & 9-45 p.m.
Aichall, Jr,
Jack Lestir, Melissa Morgan
in
BEAD WOOD 76

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
நடித்த
அன்பே வா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 Only
JoanCrawford & JohnIreland
in
Universal's
I Saw What you Did
[Adults only]

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு
பிளாஸா [வெள்ளவத்தை]
கெப்பிட்டல் [கொழும்பு]
மைலன் [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு போலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.
மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த
தேவர் பிலிம்ஸ்
முகராசி
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
லக்ஷ்மி [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனு — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
குழந்தையும் தெய்வமும்


# வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 28-11-67

## இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 8-00 நிலைய ஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்ப இசை,

இரவு 6-15தாளவாத்தியக் கச்சேரி, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 வாத்திய இசை, 7-45 நாடகம்,8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி-என். சண்முகரத்தினம்.

## சென்னை - 1

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-45 இசை அமுதம், 7-15 தமிழில் செய்தி, 7-30 அகில பாரத நாடகம், 8-30 வாத்திய இசை, 8-45 கீதமஞ்சரி, 9-15 வீணை, 9-45 பாட்டு, 10-30 மதுரகீதம், 10-35 ஆங்கிலத்தில் செய்தி 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 மாதர் நிகழ்ச்சி. 1-30 வாத்யக் கோஷ்டி, 1-45 திரைகானம் 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 வீணை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்ய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 விளையாட்டு, 8-15 ஜனதா நகர்-தொடர் நாடகம். 8-45 நாட்டுப் பாடல்கள். 9-00 ஆங்கிலத்தில் செய்தி 9-15 பாட்டு.

## திருச்சி

காலை 6-30 வந்தே மாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-50 பக்திப் பாடல், 6-55 அற உரை, 7-00 துதிப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 8-15திரைப்படஇசை11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 திரைப்பட இசை, 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசை மஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-00 மைசூர் வாக தேவாச்சார் சாஹித்யங்கள் 5-30 துதிப்பாடல்கள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 இசைமஞ்சரி, 6-35 வாத்ய இசை, 6-45 ஊர் ஆட்சி, 7-00 புல்லாங்குழல், 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி, 8-00 திரைப்பட இசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 பாட்டு.


சாவகச்சேரி நகரசபை
கேள்விப்பத்திர அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் 1968-ம் ஆண்டு, கீழ் குறிக்கப்படும் குத்தகைகளுக்கும் மற்றும் தேவையான பொருட்கள் கொடுப்பதற்கும் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் சாவகச்சேரி நகரசபைத்தலைவரால் முத்திரை சீல் செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நகலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1967-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை இவ்வலுவலகத்தில் பிணைப்பணமும் கேள்விப்பத்திர நிர்ணய விலையும் கீழ் குறிப்பிட்டபடி செலுத்திப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

கேள்விப் பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விகள் தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு, தபாலுறையின் இடது கைமேல் கோணத்தில் இன்னதற்கான கேள்விபபத்திரமென்று எழுதப்பட்டு, பதிவுக் கடிதத்தின்மூலம் அனுப்பப்படவேண்டும். அல்லது சபையின் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்படவேண்டும்.

இவைகளைப்பற்றிய விபரங்கள் தெரிய விரும்பின் அலுவலக நேரத்தில் இந்நகரசபை அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

| | பிணைப் பணம் | கேள்விப் பத்திரநிர்ணயவிலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1. வண்டி, வான் காலைக்குத்தகை | 50-00 | 5-00 |
| 2. இரட்டை மாட்டு வண்டிமூலம் நகரசபை எல்லைக்குள் கூட்டப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு | 25-00 | 5-00 |
| 3. மின்சார உபகரணங்கள் கொங்கிறீற் தூண்கள் உட்பட | 250-00 | 25-00 |
| 4. அலுவலக பாவனைக்குரிய உபகரணங்கள் | 50-00 | 10-00 |
| 5. சுகாதார வேலைப்பகுதிக்குத் தேவையான பொருட்கள் | 50-00 | 10-00 |
| 6. உத்தியோக உடைகள் | 25-00 | 5-00 |
| 6. அலுவலக தளபாடங்கள் | 50-00 | 10-00 |

இ. டா. சிவகுரு
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 20-11-67.
340


## கி. ச. தலைவர் புகார்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி அரசாங்க வர்த்தமானி உரிய நேரத்துக்குக் கிடைப்பதில்லை என்றும் இதனால் நூற்றுக்கு மேலானவர்கள் தினமும் கந்தோருக்கு வந்து ஏமாற்றத்துடன் செல்லவேண்டியுள்ளதாகவும் கூறும் ஓர் அவசர கடிததத்தை அரசாங்க அச்சகப் பகுதியினருக்கு அனுப்பியுள்ளார்.

## கொலை செய்வதாக பயமுறுத்தல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரை கொலைசெய்யப் போவதாக பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளனவாம்.

இக்கடிதங்கள் பொலிசாரிடம் கொடுக்கப்பட்டுள்ளதோடு பொலிசில் புகாரும் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக இரகசியப்பொலிஸார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர். [ந. நி.]





அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்க சமரசத்திட்டத்தை துருக்கிநிராகரித்தது

## ஆனலும் மோதலைத்தடுக்க தீவிர முயற்சி

நிக்கோஸிஸா, நவ. 27 சைப்பிரஸ் பிரச்னையில், கிரீசும் துருக்கியும் மோதாமல் தடுப்பதற்குத் தீவிரமான ராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனின் விசேஷ பிரதிநிதி, யூ தாண்டின் விசேஷ பிரதிநிதி, வட அத்லாந்திக் நாடுகள் பாதுகாப்பு ஸ்தாபனத்தின் பிரதான காரியதரிசி ஆகிய மூவருமே இம்முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இம் மூன்று பிரதிநிதிகளும், துருக்கித் தலைநகர் அங்கராவுக்கும் கிரேக்கத் தலைநகர் அதென்சுக்குமிடையே போவதும் வருவதுமாக இருக்கின்றனர்.

இரு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து, போரை தவிர்ப்பதற்கும், சைப்பிரஸ் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்துவருகின்றனர்.

### சமரசத்திட்டம் நிராகரிப்பு

கிரீஸ் அண்மையில் துருக்கியிடம் சமர்ப்பித்துள்ள சமரசத் திட்டமொன்றைப் பரிசீலனை செய்த துருக்கி மந்திரி சபை, அதை நிராகரித்துவிட்டது. இத்திட்டத்தின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

### துருக்கியின் கோரிக்கைகள்

இதற்கிடையில், துருக்கி கிரீசிடம் மூன்று கோரிக்கைகளை வலியுறுத்திவருகிறது. (1) சைப்பிரஸிலிருந்து கிரேக்க துருப்புகள் நீக்கப்படவேண்டும். (2) அண்மையில் பலாத்காரத்துக்குட்படுத்தப்பட்ட இரண்டு துருக்கிய சைப்பிரஸ் கிராமங்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கவேண்டும். (3) சைப்பிரஸ் தேசிய காவற்படைத் தளபதிப் பதவியிலிருந்து ஜெனரல் கிரீவாஸை நீக்கவேண்டும்.

இம் மூன்று கோரிக்கைகளையும் கிரீஸ் ஏற்றுக்கொள்ள இசைந்துள்ளது என்ற செய்தியை கிரேக்க வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

### மக்காரியோஸ் அறிவிப்பு

சைப்பிரஸிலிருந்து கிரேக்க துருப்புகளை வெளியேற்றுவது பற்றித் துருக்கிக்கும் கிரீசுக்குமிடையே ஏற்படக்கூடிய எந்தச் சமரச உடன்பாட்டையும் தமது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருப்பதாக சைப்பிரஸ் ஜனதிபதி மக்காரியோஸ் அறிவித்துள்ளார்.

இது இப்படியிருக்க, கிரேக்க எல்லைக்கருகே துருக்கித் துருப்புகளும், டாங்கிகளும் போருக்கு ஆயத்தமான நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மலேஷியாவில் வெள்ளம்

கோலாலம்பூர், நவ. 27 மலேஷியாவின் மேற்குப் பகுதியில், கடும் மழையும் வெள்ளமும் ஏற்பட்டுள்ளன. பலர், தமது வீடுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். போக்குவரத்தும் பல இடங்களில் தடைப்பட்டுள்ளது.

## கண்ணீர் விடும் மரம்!

'தூங்கு மூஞ்சி மரம்' பற்றி நாம் அறிவோம். 'அழு மூஞ்சி' மரம் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

கானரி தீவிலுள்ள ஒருவகை மரங்கள், தினந்தோறும் அதிகாலையில் கண்ணீர் 'விடுகின்றனவாம்' இவை சிந்தும் இந்த நீர்த்துளிகள் மரத்தின் அடியில் தேங்கி நிற்கும். தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும்போது இப்பகுதி மக்கள் இம்மரத்தின் அடியில் தேங்கும் 'கண்ணீர்' துளிகளையே குடிதண்ணீராகப் பயன் படுத்துகின்றனர்.

## மேற்கு ஆசிய விசேஷ பிரதிநிதி

நியுயோர்க், நவ. 27 ரஷ்யாவில் சுவீடிஸ் தூதுவராகக் கடமையாற்றுபவரும், ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்டின் மேற்கு ஆசிய விசேஷ பிரதிநிதியுமான திரு. குமார் ஜாரிங், நியுயோர்க் வந்து சேர்ந்துள்ளார்.

அவர் யுதாண்டைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

விசேஷ பிரதிநிதி திரு. ஜாசிங்குக்கு முழு ஒத்துழைப்பும் அளிப்பதாக இஸ்ரேல் யுதாண்டிடம் உறுதி அளித்துள்ளது.

திரு. ஜாலிங்கை ஐக்கிய அரபுக் குடியரசு வரவேற்கத் தயாராகவுள்ளதாகக் கெயிரோவில் ஐ. அ. கு. அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

## காங்கிரஸ் மீது கிருஷ்ண மேனன் தாக்குதல்

கொச்சின், நவ. 27 முன்னுள் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. பி. கே. கிருஷ்ணமேனன், கேரளாவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், இந்திய காங்கிரஸ் கட்சியைக் கடுமையாகத் தாக்கினுர்.

இந்தியா வர வர அமெரிக்கா மீது தங்கியிருக்கத் தொடங்கியுள்ளதாகவும், பார்லிமெண்ட், கவர்னர்களின் அதிகாரத்துக்குட்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினுர்.

மேற்குவங்காளம், ஹரியாஞு ராஜ்யங்களில் கவர்னர்கள் நடந்துகொண்ட விதத்தைத் திரு. மேனன் கண்டித்தார்.

அரசியற் சாஸன விதிகளுக்கு முரண்பட கவர்னர்கள் நடந்துகொள்வது இறுதியில் சர்வாதிகாரத்துக்கு வழிசெய்யுமென அவர் எச்சரித்தார்.

## கலாச்சார டைரக்டர்

கொழும்பு, திங்கள் திரு. ஹேமசிறி பிரேமவர்த்தன கலாச்சார விவ[illegible] டைரக்டராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ராஜ்யங்களில் மத்திய அரசு அதிக அளவில் குறுக்கீடு

### சுதந்திராக்கட்சி கவலை

புதுடில்லி, நவ. 27 இந்திய சுதந்திராக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் நேற்று இங்கு நடைபெற்றது. இரண்டு நாள் நடைபெற்ற இக் கூட்டத்தில், இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

முதலாவது தீர்மானம், ராஜ்யங்களில் கவர்னர் பதவிகள் மூலம், மத்திய அரசு அதிக அளவில் குறுக்கிட்டுவிடுவதையிட்டு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இரண்டாவது தீர்மானம், மேற்கு வங்காளத்தில் ஐக்கிய முன்னணிக்கட்சி ஆட்சியிலிருந்து நீக்கப் பட்டதை வரவேற்றுள்ளது.

## பினங்கு கலவரங்களில் தொழிற்சாலை, வீடுகள் தீக்கிரை

கோலாலம்பூர், நவ. 27 மேற்கு மலேசியத்தீவான பினங்கில், பழைய டொலரின் நாணய மதிப்புக் குறைப்புக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன.

நேற்று அங்கு ஒரு தொழிற்சாலையும், 3 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. 350 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

ஊரடங்குச் சட்டத்தை மீறுவோரைச் சுடும்படி பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஹொங்கொங்-சீன எல்லை மீண்டும் திறக்கப்பட்டது

ஹொங்கொங், நவ. 27 ஹொங்கொங்குக்கும் சீனவுக்குமிடையேயான எல்லை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லை, சீன இடதுசாரிகளின் கலவரங்களையும் சீன எல்லைப்புறத் துருப்புகளின் தாக்குதலையும் ஒட்டி பிரிட்டிஷ் அதிகாரிகளால் மூடப்பட்டிருந்தது.

இப்போது, பிரிட்டிஷ், சீனப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து, எல்லை திரும்பவும் திறக்கப்பட்டுள்ளது.

## அரபு உச்சி மாநாட்டுக்கான அதிபர் நாஸரின் அழைப்பு

### சிரியா நிராகரித்து விட்டது

டமாஸ்கஸ், நவ 27. ஐ. அ. கு. ஜனதிபதி நாஸரின், இரண்டாவது அரபு உச்சி மாநாடொன்றுக்கான அழைப்பைச் சிரியா நிராகரித்துள்ளது.

சிரியா அரசாங்கப் பத்திரிகை ஒன்று இத்தகவலை தெரிவித்துள்ளது.

அரபு உச்சி மாநாடொன்றில் பங்குபற்ற வருமாறு மொரக்கோ அரசர், ஜோர்தான் மன்னர் ஹுசெயினை அழைத்துள்ளதாக மொரக்கோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜோர்தான், அரபு உச்சி மாநாட்டை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது.

## போர்ச்சுகல் வெள்ளத்தில் 250 பேர் உயிரிழந்தனர்

### ஆயிரக்கணக்கானேர் வீடிழப்பு

லிஸ்பன், நவ, 27 போர்ச்சுகலில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் 250 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடும்மழையைத்தொடர்ந்து லிஸ்பன் பகுதியில் இவ்வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

வெள்ளத்தில் ஏற்பட்ட ஆட்சேதம்பற்றிய முழுவிபரமும் வெளிவந்தால், இன்னும் அநேகர் உயிரிழந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கானேர் காயங்களுக்குள்ளாகியும், வீடுகளை இழந்தும் உள்ளனர்.

## போர்த்துக்கேய அங்கோலாவில் கடும் சண்டை

அங்கோலா, நவ. 27 போத்துக்கேய அங்கோலாவில் சுதந்திரப் போராட்ட வீரருக்கும் போர்த்துக்கேயத் துருப்புகளுக்குமிடையே கடும் சண்டை நிகழ்ந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இச் சண்டையில், போர்த்துக்கேயர் இதுவரை 120 பேரை இழந்துள்ளதாகத் தெரிகிறது.

போர்த்துக்கேயத் தளமொன்றுன றும்பாலாவும் நாசமாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## பிரிட்டிஷ் தூதுக்குழு இலங்கை விஜயம்

லண்டன், நவ 27 சாம்ராஜ்ய பாராளுமன்ற சங்கத்தின் பிரிட்டிஷ் கிளையின் தூது கோஷ்டியொன்று அடுத்தமாத ஆரம்பத்தில் இலங்கை விஜயம் செய்யவிருக்கிறது. இந்த அங்கத்தவர்கள் அடங்கிய இந்தக் கோஷ்டி டிசம்பர் மாதம் 6-ம்திகதி இலங்கை வருகிறது. இத்தூது கோஷ்டியினர் இலங்கையில் 14 தினங்கள் வரை தங்கியிருப்பர்.

இத்தூது கோஷ்டிக்கு, பிரிட்டிஷ் தொழிற்கட்சி எம். பி. யான பொப்பிள்வெல் பிரபு தலைமை தாங்குவார். திரு. ஜோன் எட்வேர்ட், திரு. ஆர். சி. மனுவல், திரு. ஜியோபிரிவில்சன், திரு. ரேமண்ட் பிளெச்சர் ஆகிய பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவர்களே இத்தூதுக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாகும், சாம்ராஜ்ய பாராளுமன்றசங்கத்தின் பிரிட்டிஷ் கிளையின் உதவிக் காரியதரிசியான திரு. எச். ஜி. டேவிஸும் இக் கோஷ்டியுடன் சேர்ந்து வருகிறுர்.

## வைத்தியசாலையை பார்வையிட்டார்

சுழிபுரம். திங்கள் சர்வதேச கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனப் பிரதேச அதிகாரி கலாநிதி. எஸ். கே. சக்சேனு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்டார். வைத்தியசாலை அதிகாரிகள் அவரை வரவேற்று தேநீர் விருந்தளித்தனர்,

## வெங்காயத்தில் கொள்ளை லாபம்

### வர்த்தகருக்கு 3 மாத கடூழிய சிறை

மவுண்ட்லவேனியா, திங். சின்ன வெங்காயத்தை அதிக விலைக்கு விற்ற ஒரு வர்த்தகருக்கு மூன்று மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்த கொழும்பு தெற்கு நீதவான் திரு. சிவா செல்லையா, "வாழ்க்கைச் செலவு உயருவதற்கு ஒரு காரணம், மனச்சாட்சியற்ற வியாபாரிகளே. இவர்களுக்குக் கடும் தண்டனைவழங்கப்படவேண்டும்" என்று தமது தீர்ப்பின்போது குறிப்பிட்டார்.

ஓர் இருத்தல் சின்ன வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலை 28 சதமாகவிருக்க அதை 50 சதத்திற்கு விற்றதாக முகம்மது மஹரூக் என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டார். அவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

## சேர் இராமநாதன் நினைவு

கொழும்பு, செவ். நேற்றுக் காலை 8 மணிக்கு கொழும்பில் பார்லிமெண்ட் கட்டிட வளவில் உள்ள சேர் பொன் இராமநாதனின் சிலைக்கு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோவில் தருமகர்த்தாக்கள் மலர் மாலை சூட்டி அஞ்சலி செய்தனர். சேர் பொன் இராமநாதனின் 37-வது நினைவு தினம் நேற்று நிகழ்ந்தது. கொழும்பு விவேகானந்த சபையினரும் சேர் இராமநாதன் சிலைக்கு மலர் மாலை சூட்டி வணங்கம் செலுத்தினர்.

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் — கோப்பாய் பஸ்சேவை முன்னர் இருந்ததைவிடதற்பொழுது மிகவும் மோசமானநிலை ஏற்பட்டுள்ளதாகவும், பாடசாலை மாணவ மாணவிகளும், பொதுஜன பிரயாணிகளும் இதனுல் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் இ. போ. ச. அதிகாரிகளுக்கு புகார்செய்யப்பட்டுள்ளது.

[வி. நி,]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அதிருப்தியில் இருந்து அமைதியின்மை உண்டாகிறது. அமைதியின்மையால் பலர் சாவது, பலர் சிறைப்படுவது, பலர் நாடு கடத்தப்படுவது ஆகியவையெல்லாம் உண்டாகின்றன.

—மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஸ்ரீ கார்த்திகைமீ 12 உ. (82-11-67)

## உண்மையான தேசிய அரசு

நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காகவே ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதாக நிதி மந்திரி ஜனப்பிரதிநிதிகள் சபையில் விளக்கம் கூறுகையில் தெரிவித்திருக்கிறார். ரூபாய்மதிப்புக் குறைக்கப்பட்டது பற்றி ஜனப்பிரதிநிதிகள் சபையில நேற்றும் நேற்று முன்தினமும விவாதம் நடைபெற்றது. ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தவர்கள் சிலரும் ரூபாய் மதிப்புக் குறைப்பை எதிர்த்துப் பேசியிருக்கின்றனர். எதிர்பார்த்தது போலவே எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின்மீது கடும் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். 'ராஜினுமாச் செய்க' என்று அரசாங்கக் கட்சியினரைப் பார்த்து கூச்சலும் எழுந்திருக்கிறது. இதுவும் புதியவிஷயமல்ல. அரசாங்கம் ராஜினுமாச் செய்து வெளியேறிவிட்டால் நாட்டின் பிரச்னை அதாவது பொருளாதாரப் பிரச்னை தீர்ந்து விடுமா?

நாட்டில் நெருக்கடி ஏற்படும்போது அரசாங்கம் ராஜினுமாச் செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கூச்சலிடுவது வழக்கம். இன்றைய ஆளும் கட்சியினர் முன்பு எதிர்க்கட்சியினராக இருந்தபோதும் இப்படிக் கூச்சலிடத் தவறவில்லை. முன்னைய அரசாங்கம் ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றப்பட்டபின் நாட்டின் பொருளாதாரநிலை சீரடைந்ததா? 1956-ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் பதவியிழந்த பின்னராவது நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் பெற்றதா?

அரசாங்கங்கள் மாறுவதால் போதாது. நாட்டின் நெருக்கடியை கட்சி அரசியலுக்காகவும் பதவிக்காகவும் பயன்படுத்த முயல்வதுபோன்ற மோசமான செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது. ஆனால் ஜனநாயக அமைப்பிலுள்ள குறைதானே. இந்த மனப்பான்மை தான் ஜனநாயக நாடுகளில் நிலவுகின்றன. இதில் இலங்கை முதலிடம்வகிக்கின்றது.

வேறுபட்ட கொள்கைகளையுடைய பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கத்தைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அமைத்தார். இடையிடையேசில பிரச்னைகள் தோன்றினலும் வேற்றுமையில் ஒற்றுமை காண முடியுமென்பதை சுமார் மூன்றுவருட காலத்தில் தேசிய அரசாங்கம் நிலைநாட்டி வந்துள்ளது. இதேபோல் எதிர்க்கட்சியினரும் தமக்குள் கொள்கை வேறுபாடிருப்பினும் கூட்டணியாக இயங்கி வருகின்றனர். ஆட்சிப்பொறுப்பை நடத்துவதற்கு ஏழு கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளன. அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அடுத்து ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்காக மூன்று கட்சிகள் ஒன்றுசேர்ந்து இயங்குகின்றன.

நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்து அவலநிலையை அடைந்துள்ளது. இதைச் சீர்செய்து நாட்டு மக்களின் கஷ்டத்தை நீக்குவதற்கு ஒரு கட்சியையோ ஒரு கூட்டணியையோ இனியும் நம்பியிருக்கமுடியாதென்பதை கடந்த இருபதுவருட கால அனுபவம் உணர்த்திவிட்டது.

எனவே சகல பிரச்னைகளையும் வேறுபாடுகளையும் மறந்து நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்து மக்களின் கஷ்டங்களை நீக்கும் ஒரே நோக்குடன் சகல கட்சிகளையும் கொண்ட, உண்மையான தேசியஅரசாங்கம் அமைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. பிரதமரே இதற்கு முயற்சி செய்யவேண்டும். இதற்கு எதிர்க்கட்சியினர் மறுப்புத் தெரிவித்தால் அவர்களுக்கு அது நன்மையாக இருக்காது.

## மேற்கு ஜெர்மன் உதவி

இலங்கைக்கு விஜயஞ்செய்த மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் கெயிஸிங்கர் நமது பிரதமர் நடத்திய பேச்சுவார்த்தைகளில் பொருளாதார உதவியே பெரிதும் இடம் பெற்றிருந்ததென்பதைச் சொல்லத் தேவையில்லை. வசதி படைத்த இடங்களிடமிருந்து வசதி குறைந்தவர்கள் உதவி கோருவதிலோ, உதவி பெறுவதிலோ தவறு சொல்ல முடியாது.

மேற்கு ஜெர்மனிக்கும் சொந்தப் பிரச்னைகளிருப்பதாகவும் எனினும் இலங்கையின் அபிவிருத்திக்கு உலகவங்கி மற்றும் சர்வதேச நிதி ஸ்தாபனங்கள் மூலம் தங்களாலான உதவி அனைத்தையும் அளிப்பதாகவும் டாக்டர் கெயிஸிங்கர் பின்னர் நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இலங்கை இன்னும் அபிவிருத்தியடையாத நாடாகவே இருக்கிறது. வெளிநாட்டு உதவியும் மூலதனமும், ஒத்துழைப்பும் நமக்குத் தேவை.

தென்கிழக்காசியாவிலேயே இதுவரை இலங்கைமட்டும்தான் மேற்கு ஜெர்மனியிடமிருந்து அதிக உதவி பெற்றிருக்கிறதென்றும் பதினைந்து கோடி ஜெர்மன் நாணயமான மார்க்குகள் இலங்கைக்கு கொடுக்கப்பட்டுள்ளதென்றும் டாக்டர் கெயிஸிங்கர் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாடுகளிடமிருந்து உதவி கிடைத்தால் மட்டும் போதாது. அந்த உதவியை சரியான முறையில் பயன்படுத்தவேண்டியதும் அவசியம். இலங்கையைப் பொறுத்தவரையில் இதுவரை வாங்கிய கடனையும் உதவியையும் திருப்பிச் செலுத்தக்கூடியநிலை எப்போது ஏற்படுமென்று நினைத்துப் பார்க்கக்கூட இடம் இல்லை. பெரும் உற்பத்திப் பொருள்களை வாங்கினல் உடனடிப் பிரச்னை குறையலாமே யொழிய நாடு அபிவிருத்தியடைய முடியாது. இதன்விளைவு என்றும் வெளிநாடுகளையே எதிர்பார்த்திருக்கவேண்டியதுதான்.

## சிரமதானம்

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை எம். ஜி. ஆர். மன்ற வாலிபர்கள் காங்கேசன்துறை வெளிச்சவீட்டிற்குச் செல்லும் வீதியையும் காங்கேசன்துறை குளத்தடியில் 250 யார் நீளமுள்ள வீதியையும், பஸ் தரிப்பு மேடையையும் சிரமதானமூலம் செப்பனிட்டனர். காங்கேசன்துறைப் பகுதியில்உள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட வாலிபர்கள் இச் சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி, திங்.

யாழ்ப்பாணம் —கேரதீவு வீதியிலிருந்து மறவன்புலவிற்குச்செல்லும் கலையாபரணம் கோட்டைவீதி திருத்தப்படாதிருப்பதால் வீதியில் எவ்வித வாகனங்களும் செல்லமுடியாது தண்ணீர் தேற்கி நிற்கின்றது இதனல் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வீதி திருத்தப்படாதிருப்பது குறித்து கிராமசபை மீது கண்டனம் தெரிவிக்கும் மகஜர் ஒன்றை இப்பகுதி மக்கள் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## இன்றைய பலன்

28-11-67

செவ்வாய்க்கிழமை

கார்த்திகை மாதம்

12-ந் திகதி

நட்சத்திரம் - அத்தம் பகல் 7-04மேல் சித்திரை

திதி - ஏகாதசி காலை 7-28 மேல் திரயோதசி

சுபநேரம் - 10-43—12-13

ராகுகாலம் - 3-18 — 4-43.

மேஷம்- அவசரக்கோலம், யாத்திரைப் பிரியம்

ரிஷபம்- பிதா வழி உதவி, பிரகாசமுண்டு.

மிதுனம்- உழைப்பில் வெற்றி, உதவும் மனப்பான்மை.

கடகம்- வெளியிடத் தொடர்பு, விருந்துமுண்டு.

சிம்மம்- ஆரம்ப சூரத்தனம், ஆபத்தில் முடியும்.

கன்னி- மனப்போராட்டம், மனையில் வெடிப்பு.

துலாம்- இன்சொல் விருப்பு, அன்புப் பெருக்கு.

விருச்சிகம்- நீண்ட பயணம், நினைவலைகள்.

தனுசு- வாகனவிருத்தி வாழ்க்கையில் வசந்தம்.

மகரம்- நாடிவரும் உறவால் தேடிவரும் நன்மை

கும்பம்- பொறுண்மைப் பார்வை, பொதுமை நன்று

மீனம்- குடும்பப் பாசம் குதூகல மிகுதி.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

# மனநோயாளர்க...
# அனுதாபமும்க...
# 'விசரன்வந்துவிட்டான்' என...
# மனைவி கூறியதன் விளை...

மன நோய் சம்பந்தமாக, மனநோய் நிபுணர், டாக்டர் ரி. அருளம்... எம். பி பி. எஸ். (இலங்கை) டி. பி. எம் (இங்கிலாந்து)... முன்தினம், அரசாங்க செயலகத்திலுள்ள ஆலோசனை மண்டபத்தில்... ழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி இது.

"யாழ்ப்பாணகுடாநாட்டில் உள்ள மக்களில் 600 பேர் எனது வைத்திய நிலையத்திற்கு, மனநோய் காரணமாக வைத்தியம் பெற வந்தார்கள். இவர்களில் 360 பேர் சிகிச்சையின் பின் பூரண சுகம் பெற்றுர்கள். 100 பேர் சிறிதளவு குணமடைந்தார்கள். 140 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற வரவில்லை இந்த 600 பேர்களில் சிறிதளவு குணமடைந்த 100 பேர்களையும், சிகிச்சைககு வராத 140 பேர்களையுமே மனநோயாளர் எனக் குறிப்பிடலாம்."

மன நோயாளர்களை, அவர்களை கவனிக்கும் டாக்டர்கள், நர்சுகள், நண்பர்கள், இனத்தவர்கள், அன்புடன் நடத்த வேண்டும், அனுதாபத்துடன் நோக்க வேண்டும். சிகிச்சைக்குப் பின் அவர்கள் பூரண சுகம் பெற்று வரும்போது, சமூகம் அவர்களை மற்றவர்களைப் போல் மதிக்க வேண்டும். என்னிடம் சிகிச்சை பெற்ற ஒருவர் பூரண சுகம் பெற்று வீடு திரும்பிய பின், அவரது மனைவி "விசரன் வந்து விட்டான்" என்று கூறினர். இதனல், அவர் மனம் தாக்கப்பட்டு மீண்டும், என்னிடம் சிகிச்சை பெற வந்தார்.

மன நோயாளருக்கு மாத்திரைகள், ஊசிகள், மின்சார சிகிச்சை முதலியவற்றினல், சிகிச்சையளித்து வருகிறேம். தற்பொழுது காங்கேசன்துறையிலும், பருத்தித் துறையிலுமுள்ள மன நோயாளர் சிகிச்சை நிலையத்தில், தினமும் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு முறை சிகிச்சை பெற்று குணமடைந்தவர் இரண்டாம் முறை அந்நோயினல் பாதிக்கப்படாமலிருக்க, தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வரவேண்டும். அலைந்து திரியக் கூடாது. வீண் கதைகள் கதைக்க மற்றவர்கள் இடம் கொடுக்கக் கூடாது முழு நேரத்தையும் தனது வேலையில் செலுத்த வேண்டும். நன்முக நித்திரை செய்ய வேண்டும். ஓய்வு அவசியம்.

### நண்பர் கூறியதன் விளைவு

மன்னரிலிருந்து ஒரு நண்பர் என்னிடம் ஒரு மன நோயாளரை அழைத்து வந்தார். என்னிடம் சிகிச்சை பெற்று சென்ற போது. தொடர்ந்து மாத்திரைகளை சாப்பிட்டு வரும்படி கூறினேன். எனது நண்பர் ஒரே மாத்திரையை எதற்கு தொடர்ந்து சாப்பிடவேண்டுமெனக் கூறியதால், அவருக்கு மீண்டும் மன நோய் காணப்பட்டு என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். மன நோயாளர் தங்களுக்கு எது பிடிக்குமோ, அதில் தங்கள் நேரத்தை செலவு செய்ய வேண்டும். சங்கீதத்தில் பிரியமானவர்கள் றேடியோ கேட்கலாம். கட்டுரை, கதை பிரியமானவர்கள், நூல்கள் வாசிக்கலாம். சினிமாவிற்கு சென்று நேரத்தை போக்கலாம். இங்குள்ளவர்களை, தோட்டச் செய்கையில் தான் அதிகமாக ஈடுபடுத்துகிறேம். இங்கிலாந்து வேறு தேசங்களில் தொழிற்சாலைகளில் அவர்களை ஈடுபடுத்துகிறுர்கள்.

### கேலி செய்வது எதற்கு?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரை மனநோய் பற்றி பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளேன். பைத்தியம் என்றதும் மற்றவர்கள் கேலிசெய்கிறுர்கள் எந்தவகையான உடல்நோய் வந்தாலும், மற்வர்கள் கேலிசெய்வது கிடையாது நீரழிவு. நெருப்புக்காய்ச்சல், இரத்த... வேறு பாரதூரமா... வந்தாலும் எவ... துக் கேலிசெய்வ... கள். ஆனல்... வந்ததும், 'விசர... தியம்'' என்று... செய்வார்கள்; ... செய்வார்கள். ... தங்களுக்காக... டுகிறவர்கள், ... ளரைப் பார்த்து... செய்வ...கள், ... கார...ம் என்ன... ற்கு என்ன இரு...

### 16 வியாதிகள்...

மனநோய் ச... குறைந்தது 16 ... கள் இருந்கிறது... டத்தில் சிகிச்... 1850 மனநோ... 240 பேர்களை ... மனநோயாளர் ... முடியும். இங்... வர்கள் உடன...

## 'காட்சிப் பொருளா...

## பெண்கள்மாறிவிடக்கூ...

### மாதர் கலாமன்றக்கூட்டத்தில்...

உடுப்பிட்டி திங்கள்

"பரத நாட்டியம், பண்டைத் தமிழினத்துடன் ஒட்டிப் பிறந்த ஒரு புனிதக் கலையாகும். நம்மில் மிகச் சில பெண்கள் பரத நாட்டியம் ஆடுவதைத் தவருக கண்டுகொண்டு பார்க்கின்றனர். இது கவலையளிக்கின்றது. எமது சமுதாயம் முன்னேறவேண்டுமாகில் பெண்களும் ஆண்களுடன் சரிசமமாகப் பணியாற்றவேண்டும். ஆனல் பெண்குலம், தமது பெண்மையை இழந்துவிடாது தான் ஒரு தாய் என்பதை உணர்ந்து நடக்கவேண்டும். எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பெருஞ்சுமை இன்றைய குழந்தைகள்மீதே சுமத்தப்பட்டுள்ளதால் தாய்மார் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

தமிழ்ப் பெண்கள் தங்கள் கலாசாரத்திற்குப் பொருத்தமான உடைகளையே அணியவேண்டும். பெண்கள் காட்சிப்பொருளாக மாறிவிடக்கூடாது. இழிநிலைக்கு ஆளாகாமல் பெண்குலம் தம்மைக் காத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்."

மேற்கண்டவாறு திருமதி விஜயலட்சுமி குலத்துங்கம் பருத்தித்துறையில் நடைபெற்ற வடமராட்சி மாதர் கலாமன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். கூட்டத்துக்குத் திருமதி சத்தியபாமா பத்மநாதன் தலைமை வகித்தார். மற்றும் பலரும் பேசினர்.

வடமராட்சிப் பகுதியிலே விற்பனவு இலாகா இல்லாத காரணத்தினல் ... வகைகளும் மற்ற... பொருள்களும் ... கொடுத்து வா... யுள்ளது. ஆத... படி பொருட்கள்... விலையில் எமக்கு... தற்கு வழிசெய்... பருத்தித்துறை... லியுடியிலும் வி... ஸ்தாபனக் கிளை... னடியாகத் ... அரசாங்கத்தை... தென்றும் ... நவிண்டில், வதி... இடங்களிலிருந்... அரசினர் வை... குச் செல்லும் ... களும் பார்வை... இரண்டு பஸ்... ஏறிப் போகவே... தால் மிகவும் ... ந்து வருவதாக... உடுப்பிட்டி வதி... மந்திகைக்கு ... சேவையை வி... பிக்குமாறு ... போக்குவரத்து... கேட்டுக்கொள்... றும் தீர்மானி... ளது.

மன்ற ஆண்டு... அடுத்தமாதம் 1... நெல்லியடியில் ... தெனவும் ஆண்... யிடுவதெனறும் ... யப்பட்டது

அண்மையில் ... றில் மரணமான ... சுகாதார வைத்... டாக்டர் ஜீ... மறைவுக்கு அனு... வித்து அவருடை... சாந்தியடைய ... யௌன அஞ்சலி ... பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர்களிடம் அன்பும் ...ம் காட்ட வேண்டும்

## ...' என்று ...விளைவு

...டர் ரி. அருளம்பலம் (...கிலாந்து), நேற்று ...ன மண்டபத்தில் நிக...ி இது.

...ல், இரத்த அமுக்கம் ...வேறு பாரதூரமான நோய் ...ந்தாலும் எவரும் சிரித்...துக் கேலிசெய்யமாட்டார்...ள். ஆனால் மனநோய் ...ந்ததும், 'விசரன், பைத்...ியம்'' என்று கூறிக் கேலி ...செய்வார்கள்; கிண்டல் ...செய்வார்கள். மற்ற வருத்...ங்களுக்காக அநுதாபப்...டுகிறவர்கள், மனநோயா...ளரைப் பார்த்து வேடிக்கை ...செய்வ...கள், இ...ற்குக் ...ாரணம் என்ன? சிரிப்பத...ற்கு என்ன இருக்கிறது.

### 16 வியாதிகள்

...மனநோய் சம்பந்தமாகக் ...றைந்தது 16 வித வியாதி...ள் இருந்கிறது. ஒருவரு...டத்தில் சிகிச்சை பெற்ற ...850 மனநோயாளர்களில் ...40 பேர்களை மட்டும்தான் ...னநோயாளர் எனக் கூற ...டியும். இந்நோய்கண்ட...ர்கள் உடனடியாக சிகிச்...சைக்குவராததால், நோயின் தன்மை முற்றுகிறது. இத'...னல் ஒரு கிழமையில் சுகப்படுத்தக்கூடிய நோயாளிகளுக்கு ஒரு மாதமும், 3 மாதத்தில் சுகப்படுத்தக்கூடியவருத்தத்திற்கு மூன்று வருடமும் செல்கிறது வருடக்கணக்கில் சிகிச்சைபெறுதவர்கள் பின் சிகிச்சை பெற்றும் பூரணசுகமடைய முடியாதுபோய்விடுகிறது.

### நோய் கண்டுபிடிப்பது கடினம்

நித்திரையின்மை, அநாவசிய நடவடிக்கைகள், இந்நோய்க்கான அடையாளங்கள். எல்லாரும் பிழைவிடுவது சகஜம். சிலர் மறந்துவிடுவார்கள். சிலர் நோய் வந்தபோது அத்தவறைப் பற்றி சிந்திப்பார்கள். ஒருவர் ஒருதவறை விட்டால் அவர் மனநோயால் பாதிக்கப்பட்டதும் 5 வருடத்தின் பின் அதைப்பற்றிச் சிந்திப்பார். அவரது எண்ணங்கள் பின்நோக்கிச் செல்லும். தான்விட்ட தவறுக்காக பொலிஸார் வந்து கைதுசெய்வார்கள் என எந்நேரமும் பயத்துடன் இருப்பார். சொந்தக்காரர் வந்தாலும் அவர் ஒரு இரகசியப்பொலிஸார் என நினைத்துவிடுவார்.

### நோய்வரக் காரணம் என்ன?

இந்நோய்க்கான காரணங்கள் எவை? மிகவும் விருப்பமானவர்கள் மரணமடைந்தால்; காதலில் தோல்வியுற்றால்; கடன்தொல்லைஏற்பட்டால்; பரீட்சையில் தவறினல், சூழ்நிலைகளைப் பொறுத்து 30 சத வீதத்தினருக்கு இந்நோய்வருகிறது இதில் 14 வீதத்தினருக்கு அதாவது ஒரு குடும்பத்தில் தகப்பனுக்கு இந்நோய் இருந்தால் 7 பிள்ளைகளில் ஒருவருக்கு இந்நோய் வரக்கூடும். இந்நோய் கண்ட சிலருக்கு சிகிச்சை பெறுமலே சுகம்வரக்கூடும். அதற்கு நீண்டநாள் செல்லும். இதற்குள் அவர் வேலையையும் இழந்துவிடக்கூடும். ஆதலால் உடனடியாக சிகிச்சை பெறுவது நல்லது.

—

புலோலி, திங்கள்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி வணிக மாணவமன்றத்தின் முதல் கூட்டம் செல்வன் சு.கதிரவேலு தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- ... என். செல்வராசா. செயலாளர்- மா.மரியதாஸ், தனதிகாரி- சி.மகேந்திரநாதன்.

# வாரியார்விட்ட ஏலம்

ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்தி நகர் கோயிலிலே 20 நாட்களாகப் பாரதக் கதை சொல்லுகின்றார்சுவாமிகள். மண்டபம் தாங்கவில்லை கூட்டம். ஆண், பெண், குழந்தைகள் மணிக்கணக்காக இருந்து ரசிக்கிறார்கள். குழந்தைகளை அவ்வப்போது கேள்விகள் கேட்டு, பரிசுகள் கொடுத்து ஊக்குவிக்கின்றார். நம் குழந்தைகள் எவ்வளவு கூர்மையாகக்கவனித்து, பலநாட்களுக்கு முன் சொன்னதையும் மறக்காமல் பதில்சொல்லுகிறார்கள் தெரியுமா? படுக்கப் போகும்போது நிதம் தியானம் செய்யவேண்டுமென்றும், சிவாயநம என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதவேண்டுமென்றும் அவர் ஒரு குருபோல் இருந்து எல்லாருக்கும் ''மந்திர தீட்சை'' யும் அளித்துவருகிறார்.

கோயில்சுவாமிக்கு வந்த சாதாரண பழைய பட்டுத் துண்டுகளை கைதேர்ந்த வியாபாரிபோல் ஏலம்விட்டு நூறு, இருநூறு, ஐந்நூறு என்றும் விற்று, கோவில் கைங்கரியத்துக்கு பலரும் உதவும்படி செய்தார். ஒரு மஞ்சள் பட்டுத்துணியை எடுத்து, இது பொன்னிறமானது ஐநூறுவரை விலைபோகலாம் என்று கூறி ஏலம்விட்டார். 51ரூபாயில் ஆரம்பமானது. 501-க்கு விலைபோயிற்று! தாய்மார்கள், குழந்தைகளும் ஏலம் கேட்டு, பல துணிகளை வாங்கினர். சுமார் மூன்றுமணி நேரம் போவதே தெரியவில்லை.

ஆற்றுப்பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அல்லாது ஊற்றுப்பெருக்காய் உல...கூட்டுமாம். அதுபோல், ஜிந்துப்பிட்டி கோயிலை வெகு மேலான முறையில் நிர்வகித்துவரும் தட்சிணத்தார் எனும் இந்திய பரம்பரையினர் பலபல இன்னல்களுக்கு உட்பட்டுள்ளஇக்காலத்திலும் வாரியார் சுவாமிகளை வரவழைத்து பல்லாயிரக்கணக்கானவர்களுக்குஇப்பேரின்பம் கிடைக்கும்படி செய்துள்ளது மிகப்பெரிய ஞானதானமும் புண்ணியமுமாகும். தட்சிணத்தாரும் அவர்களது இவ்வித புனித தர்மகைங்கரியங்களும்நீடூழி வாழ்க.

ஃ ஃ ஃ

சைவ சமய குரவர்கள் நால்வரும் தமிழகத்தில் அவதரித்தனர். இந்த நால்வரும் சேர்ந்து ஓர் ஆறுமுகநாவலராக ஈழத்தில் அவதரித்தனர். இதனல் ஈழத்துக்கு மிகப்பெருமை என்று வாரியார் அவர்கள் கூறியபோது மண்டபத்தில் பெரிய கரகோஷம். என் உள்ளத்தில் சொல்லமுடியாத மகிழ்ச்சியும் உணர்ச்சியும். தம்பேச்சின் மூலம் இந்தியாவுக்கும் ஈழத்துக்கும் எவ்வளவு பலமான பாலம் அமைத்து நட்புறவை வளர்க்கின்றார்.

ஒருநாள் கதை நடந்துகொண்டிருக்கிறது. அங்கு மக்கள்பணி செய்துகொண்டிருந்த ஐயாசாமி என்ற வர்த்தகர் திடீரென சாய்ந்தார். உடனே அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். வழியிலேயே உயிர்

### ஐயரான் எழுதுவது

பிரிந்துவிட்டதாம்; கதையும் அன்று அத்துடன் முடிந்தது. மறுநாள் ஐயாசாமி என்றபெயரின்பெருமையை விளக்கினர். ஐயா என்றால் சிவபெருமான் (வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே) சுவாமி என்பது முருகனுக்குரிய பெயர். (நீண்டு) ஐயாசாமி என்ற சிவ சுப்பிரமணியத்தாருக்கு அவ்வித ஆயாசமில்லாத மரணம் கிடைத்தது மிக மிக அரிது. அவர் புண்ணியம் செய்தவர். இவ்வித சம்பவம் என் கதாப்பிரசங்கங்களில் இதுவரை எங்கும் நடந்ததில்லை. இதை என்றும் மறக்கமுடியாது என்று சொல்லி அவருக்காக இரண்டு நிமிட மௌனப் பிரார்த்தனையை எல்லாரும் சேர்ந்து செய்யச் செய்தார். சவஊர்வலத்தில் அவரும் கலந்து மயானம் சென்று தமது மரியாதையைச் செலுத்தினர்.

ஃ ஃ

ஜிந்துப்பிட்டி சண்முகவிலாச மண்டபத்தில் அவ்வளவு ஜனத்திரளுக்கு இடம் காணது. புழுக்கம் வேறு. சுவாமிக்குச்சாத்திய பட்டுத் துண்டுகளை வாரியார் ஏலம்விட்டு ஐந்துரூபாயில்தொடங்கியதும், ஒரு வர்த்தகஅன்பர். இந்த ''மண்டபத்தில் ஒருமின்சாரவிசிறி போடும் செலவு'' என்று [அதாவது சுமார்400 ரூபாய்] என்று கேட்டது. நமபமுடியவில்லை. அதே அன்பர் பின்னர் எழு மின் விசிறிகள் போடுவதாகக் கூறி ஏலத்தில் அத்துணிகளை எடுத்தார். வேறொரு துணியை வாரியார் சிரித்துக் கொண்டே ஏலத்தில் விட்டதும், ''இம் மண்டபத்துக்கு இன்னும் எவ்வளவு விசிறிவேண்டும்?'' என்று அந்த வர்த்தக அன்பர் ஏதோ ஆவேசம் வந்தாற்போல் கேட்டு ''நான்கு தேவை'' என்றறிந்ததும், அந்த நான்கு விசிறிகளுக்கான செலவை ஏற்பதாகக் கூறி, அத்துணியை ஏலமெடுத்தார். இக்காட்சிகளைஎல்லாம் நம்ப முடியவில்லை.

திருச்சியிலே ஓரிடத்தில், இவ்விதம் ஏலம் போடுகையில் ஒருநாள் ரூபா 500 என்று கேட்ட மனைவியார் ஆயிரம் என்று போட்டியாகச் சொல்லி எடுத்தார். எல்லாம் தர்ம கைங்கரியத்துக்கு. கொழும்பிலே 11மின் விசிறிகளை கோவிலில் போட ஒரு வர்த்தக அன்பர் ஆர்வத்துடன் யாரும் கேளாமலே முன்வந்ததைப் பார்த்ததும், வர்த்தக சமூகத்தைப்பற்றியே புது மதிப்பு ஏற்படுவதாக இருந்தது.

குழந்தைகளைக் கேள்வி கேட்டு, சரியான பதில் சொல்லும் குழந்தைகளுக்கு 5 அல்லது 10 சதம் விலையுள்ள சின்னப்புத்தகம் அல்லது சின்னப்படம் இவற்றையே இதுவரை தாம் கொடுத்துவந்ததாகவும், ஆனல் கொழும்பிலே பல வர்த்தக அன்பர்கள், சோப்பு, பவுடர் டப்பா, பவுண்டன்பேன இவற்றை எல்லாம் அளிக்க, அவற்றைக் குழந்தைகளுக்குப் பரிசாக வழங்கியது தமக்குப் புது அனுபவமென்று கூறி, அவர்களை வாழ்த்தினர்.

வர்த்தகர்களில் யாரும் இப்படி தர்மம் செய்தால் ''அது பிளாக்மார்க்கெட்'' என்பராம் சிலர். அதே வருமானம் அவர்களுக்கே கிடைத்தால், தர்மத்துக்கு ஒருசதமும் கொடுக்கமாட்டார்கள என்று பலத்த சிரிப்பினிடையே கூறினர், வாரியார் அவர்கள்.

நமது பல குறைகளையும் நகைச்சுவையுடன் இடித்து இடித்துக்கூறி நம்மைத் திருத்தி புதுமனிதராக்குகிறார்.

ஒரேநாளில் பல கூட்டங்களில் மணிக்கணக்காகப் பேசி உள்ளங்கவரும் வாரியார்சுவாமியின் தொண்டை சிறிதும் கட்டவில்லை. எப்போதும்போல 'கணீர்' என்று இருக்கிறது. ''மார்-ச்'' என்று அவர் உரக்கக் கூறி, ''டகுடகுடு டகுடகுகு...'' என்ற திருப்புகழை உச்சஸ்தானியில் துரிதமாகப்பாடியது மண்டபத்தையே கிடுகிடுக்கச் செய்தது. இன்னும் எவ்வளவோ, எவ்வளவோ! பல பல நல்ல தொண்டுகளைச் செய்யவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள சுவாமி அவர்களின் பெருமையைப்பற்றிச் சொல்ல இந்த என் சின்னப் பேனைக்கு சக்தி ஏது?

—

## ...பொருளாக ...விடக்கூடாது'

### ...கூட்டத்தில் பேச்சு

...ாரணத்தினல் ...ரக்கறி ...கைகளும் மற்றும் உணவுப் ...பொருள்களும் அதிக விலை ...கொடுத்து வாங்கவேண்டி ...ள்ளது. ஆதலால் மேற்...டி பொருட்கள் நியாய ...லையில் எமக்குக் கிடைப்ப...ற்கு வழிசெய்யுமுகமாகப் ...ருத்தித்துறையிலும் நெல் ...யடியிலும் விற்பனவு ...தாபனக் கிளைகளை உட...டியாகத் திறக்கும்படி ...ரசாங்கத்தைக் கோருவ...தன்றும் உடுப்பிட்டி, ...விண்டில், வதிரி முதலிய ...டங்களிலிருந்து மந்திகை ...ரசினர் வைத்தியசாலைக் ...ச் செல்லும் நோயாளர் ...ளும் பார்வையாளர்களும் ...ரண்டு பஸ்களில் மாறி ...றிப் போகவேண்டியிருப்ப...ால் மிகவும் கஷ்டமடை...து வருவதாகவும் எனவே ...டுப்பிட்டி வதிரியினூடாக ...ந்திகைக்கு நேரடி பஸ் ...சேவையை விரைவில் ஆரம்...க்குமாறு இலங்கைப் ...போக்குவரத்துச் சபையைக் ...கேட்டுக்கொள்ளுவதென் ...ம் தீர்மானிக்கப்பட்டுள் ...து.

...மன்ற ஆண்டு விழாவை ...டுத்தமாதம் 16-ம் திகதி ...நெல்லியடியில் நடாத்துவ...தனவும் ஆண்டுமலர் வெளி...டுவதெனவும் முடிவுசெய்...ப்பட்டது.

...அண்மையில் விபத்தொன்...ல் மரணமானவடமராட்சி ...காதார வைத்திய அதிகாரி ...டாக்டர் ஜீவநாயகத்தின் ...றைவுக்குஅனுதாபம் தெரி...த்து அவருடைய ஆத்மா ...ாந்தியடைய இரு நிமிட...ளன அஞ்சலி செலுத்தப்...பட்டது.

# பழையன கழிய வேண்டும்!

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினனே'

என்று பவணந்தி முனிவர் கூறியது தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, பொதுவாக உலகிலுள்ள எந்த விஷயத்திற்குமே என்பதை நாளுக்கு நாள் கண்கூடாக் காணக் கூடியதாயிருக்கிறது.

புதியன புகுதல் மனித நாகரீகத்தில் முன்னேற்றத்தின் அறிகுறி என்று வைத்துக் கொண்டால் டார்வின் விஞ்ஞானியின் பரிணாம தத்துவத்தை பவணந்திமுனிவர் மேற்படி சூத்திரத்தின்மூலம் எப்பொழுதோ விளக்கி வைத்து விட்டார், என்றே சொல்ல வேண்டும்.

டார்வின் விஞ்ஞானியும் அவருக்குப் பின் வந்த பிற்கால விஞ்ஞானிகளும், இப்பொழுது உலகிலுள்ள உயிர் வர்க்கம் பலகோடி வருடங்களுக்கு முன்பு சமுத்திரத்திலிருந்தே உற்பத்தியானது என்று கருதுகிறார்கள்.

கண்ணுக்குத் தெரியாத சிறு உயிரணுக்கள்கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பெரிதாகி மெல்ல மெல்ல தரையில் ஏறத் தொடங்கின தரையில் அவை ஊர்வன. நடப்பன, பறப்பன என்ற பலவித ஜந்துக்களாகி கடைசியாக பரிணாமத்தின் கடைசிக் கட்டமாக மனிதன் உற்பத்தியானன்.

பூமியில் மனிதன் தோன்றி பலலாயிரம் ஆண்டுகளாகி விட்டன. நீரிலிருந்து எப்படி நிலத்துக்கு தாவினனே அதுபோலவே இன்று பூமியிலிருந்து அண்ட வெளிக்கு தாவப் பார்க்கிறான்

இது ஒரு புறமிருக்க, பழையன கழிதலையும் புதியன புகுதலையும் இன்று யாழ்ப்பாணத்து கமக்காரரிடையே நிதர்சனமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பொதுவாகயாழ்ப்பாணத்தவர்கள் மிகவும் வைதீகப் பிண்டங்கள் என்ற ஓர் அபிப்பிராயம் இன்றும் நிலவுகிறது. அவர்களை ஒருபுதிய வழியில் திருப்புவதென்றால் மகாசிரமம். இது ஒரளவு உண்மையேயாயினும் இந்நிலைமை சிறிதாக மாறிக் கொண்டே வருகிறது.

ட்ராக்டர் யந்திரங்களை பிசாசுகள் என்று நினைத்து அஞ்சி ஒதுங்கியவர்கள் இன்று உழவுக்கு அந்தபிசாசுகளையே நம்பியிருக்கிறார்கள். தண்ணீர் இறைக்கும் 'பம்பு'கள் தோட்டத்தைப் பழுதாக்கிவிடும் என்று நினைத்தவர்கள் இன்று காலையில் எழுந்தவுடன் அதைத்தான் இயக்குகிறார்கள்.

நெல்வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் பசளை உரம் இடுங்கள் என்று அரசாங்கம் பலவருடங்களாக வற்புறுத்திவந்த போதிலும் 'அது நிலத்தைச் சுட்டுவிடும் பயிரைப் பொசுக்கிவிடும்' என்று பல சாக்குப்போக்குகளைக்கூறி வந்தவர்கள், இன்று தலைகரணமாக விழுந்தடித்துக் கொண்டுபோய் உரம் வாங்குகிறார்கள்.

இப்படி இன்றும் எத்தனையோ மாறுதல்கள் நாளுக்குநாள் சமுதாயத்தில் தோன்றுகின்றன. இவற்றை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அவசியத தேவைகளும் அவற்றை நம்மீது சுமத்திவிடுகின்றன

இன்று அரிசி, மா, பாண் பெட்ரோல், மண்ணெண்ணை எல்லாம் விலையேறியுள்ளன. இதைத் தொடர்ந்து தேநீர் விலையும் அதிகரித்திருக்கிறது. இன்னும் என்னென்னவெல்லாம் அதிகரிக்கப்போகிறதோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

மாவையும், பாணையும் தின்று அறியாத மக்கள் இன்று எப்படி அவற்றை நித்திய போஜனமாக்கிக் கொண்டார்களோ, அது போல இன்று ஏற்பட்டுள்ள நிலையில் வேறு உணவுப் பொருட்களைத் தேடிக் கொள்ளவேண்டும்.

அது மட்டுமல்ல, இன்று ஏற்பட்டுள்ள இந்த அவல நிலைக்கு என்ன மூலகாரணங்கள் என்பதையும் கண்டுபிடித்து, கடந்த சில வருடங்களாக அவர்கள் பின்பற்றி வந்த கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் மாற்றிக்கொண்டு, இனிமேலாவது நமது சீவியம் வளம்பெறுவதற்கு வேண்டிய மார்க்கங்களைக் கையாளவேண்டும்.

பழையனவற்றைக் களைந்துவிட்டுப் புதியனவற்றை புகுத்தவேண்டும்.

# நாட்டிலும் நகரிலும்

— ...ப்போக்கிரி —

## மலர் வெளியீட்டு விழா

கொழும்பு, திங்கள்

காரை நகர் சைவமகா சபை பொன்விழாமலர் வெளியீட்டுவிழா இம்மாதம் கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் கொழும்பு காரை அபிவிருத்திச்சபை ஆதரவில் நடைபெறவிருக்கிறது. இம் மலரை மதுரை ஆதீன மகா வித்துவான் அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் வெளியிட்டு வைப்பார். அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தரும் திருவாணைக்கா திருப்பணிச்சபைத் தலைவருமான திரு.ரி.எம். நாராயணசாமிப் பிள்ளை செல்வி.நா. காசிப்பிள்ளை திருகே.பி.ஹரன் ஆகியோர் மதிப்புரை வழங்குவார்கள். திரு.க.சி.நடராசமுதல் பிரதியை வாங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்றம்

வெள்ளவத்தை, ஞாயிறு கொழும்பு பிரதம தபாலதிபர் காரியாலயத்தில் தமிழ்த் தட்டெழுத்தாளராகக்கடமையாற்றும் அகில இலங்கை தமிழ்த்தட்டெழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. கோ. பாக்கியராசா டிசம்பர் மாதம் முதலாந் திகதிமுதல் களுவாஞ்சிக்குடி கச்சேரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

கொழும்பு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சி.தில்லைநாதன் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இடமாற்றஞ்செய்யப்படவிருக்கிறா.

ஃ ஃ

புலோலி, திங்கள் பருத்தித்துறை கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய மனேஜராயிருந்த திரு. வி. நாகேந்திரன் பதவி உயர்வு பெற்று கொழும்பு தலைமை காரியாலயத்துக்குமாற்றப்பட்டுள்ளார். அடுத்த மாதம் 1-ம் திகதி தொடக்கம் கொழும்பில் கடமையாற்றுவார். யாழ்ப்பாணம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தைச் சேர்ந்த எஸ். கனகசபாபதி இவரது இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

புன்னாலைக்கட்டுவன், திங்கள் நெல்லியடி மத்திய மகாவித்யாலய விவசாயபோதனாசிரியரான திரு. பொ. கணேசமூர்த்தி, அடுத்தாண்டு ஆரம்பத்திலிருந்து. பரமேஸ்வராக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம்மகாத்மாஜி கஷ்ட நிவாரண சங்க புனருத்தாரண ஆ பொதுக்கூட்டத்தின்போது 'புதுவருட' உத்தியோகத்தர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு.எஸ்.இராசையா காரியதரிசி; திரு. பி.ஜி. டேவிட் தனாதிகாரி; திரு. சீ. இரத்தினம். ஒன்பது பேர் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் காரியதரிசி திரு. ரி.சங்கரப்பிள்ளை சங்கத்தின் வளர்ச்சிக்கான சில ஆலோசனைகளை எடுத்துக் கூறினார்.

## இளைஞர் கழக நிர்வாகிகள்

உடுவில், திங்கள் உடுவில் இளைஞர் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் கழகத்தலைவர் திரு.வி. பரிபூரணானந்த சர்மா தலைமையில் கூடியது. செயலாளர் திரு.சி. கணேசரத்தினம் வருடாந்த அறிக்கையை சபையில் வாசித்தளித்தார்.

நடப்பு வருடத்தின் கழக உத்தியோகத்தர்களாகபின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு.சி. சுந்தரலிங்கம், உப தலைவர் திரு ச. செல்வராசா, காரியதரிசிதிரு சி கணேசரத்தினம், உபகாரியதரிசி பரிபூரணானந்தசர்மா, தனாதிகாரி திரு.பொ.கமலநாதனே.

## தமிழ்காங்கிரஸ் கிளை உறுப்பினர்

யாழ்ப்பாணம், செவ். புங்குடுதீவு தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் புதியநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

தலைவர்-திரு. ச.கந்தப்பிள்ளை, இணைச் செயலாளர்கள்- திரு. க.குமாரசாமி, திரு.செ. வயிரவநாதன், பொருளாளர்-திரு.சபாலிங்கம்

நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது

## மாடு திருடியவருக்கு றிமாணட்

அளவெட்டி, திங்கள் பழை வீமன்காமம் செல்லப்பா வைத்திலிங்கம் என்பவர் தமது தோட்டத்தில் கட்டியிருந்த ரூ. 500பெறுமதியான சவாரி மாட்டை காணவில்லையெனக் காங்கேசன்துறைப்பொலிசில் புகார் செய்தார்.

இப்புகாரைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் அதே ஊரைச்சேர்ந்த முத்துராசா என அழைக்கப்படும் அப்பையாவை காங்கேசன்துறைப்பொலிசார் கைது செய்து மல்லாகம் மாஜிஸ்திரேட் டீ. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

விசாரணையின்பொழுதுசந்தேக நபரான அப்பையா திருடிய மாட்டை கோண்டாவிலில் உள்ள ஒரு வீட்டில் கட்டியதாகத் தெரிய வந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டபடியால் மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை அடுத்தமாதம் 5-ம் திகதி ஒத்திவைத்து அதுவரையும் எதிரியை ரிமாண்டில் வைக்கும்படியும், அவரது கை அடையாளத்தை எடுக்கும் படியும் உத்தரவட்டார்.

## ஹோட்டல்களில் சாப்பாட்டு பொருள்கள் விலைஉயர்வு

வெள்ளவத்தை, திங்கள் இலங்கையில் ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள ஹோட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை அதிகரிக்கபபட்டுள்ளது. வெள்ளவத்தையில் உள்ள சாப்பாட்டுக் கடைகளில் முன்னர் 6 சதமாக விற்கப்பட்ட பிளேன்டீ 7 சதமாகவும், பத்துசதம் விற்ற டீ 12 சதமாகவும் விற்கப்படுகிறது. காரியாலயங்களிலுள்ள கன்டீன்களில் முன்னர் அரைக் கிளாஸ்வரை கொடுக்கப்பட்ட தேநீரின் அளவு தற்போது மேலும் குறைக்கப்பட்டுள்ளது. சில கடைகளில் முன்னர்90சதம் விற்ற மரக்கறி உணவு ஒரு ரூபாவாகவும், 1-25 விற்ற மாமிச உணவு 1-35 ஆகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்துஅரசாங்கஊழியர்களுக்கு 15 ருபா சம்பளம் கூட்டப்பட்டிருந்தும் அவர்கள் இதுபற்றிஅதிகம் மகிழ்ச்சி கொண்டுள்அதாக தெரியவில்லை, பதினைந்து ரூபாவைக் கொடுத்துவிட்டு இருபது ரூபாவை வாங்குகிறது அரசாங்கம்' விலைவாசிகள் திடீரென்று ஏறிவிட்டன. ஹோட்டல்களில் நல்ல சாப்பாடே சாப்பிட முடியவில்லை, அவ்வாறிருக்க கூடியதாகத் திடீரென்று ஹோட்டல்காரர்கள் சாப்பாட்டின் விலைகளை உயர்த்தினால் அதை எவ்வாறு பொறுத்துக் கொள்வது என்று அரசாங்க ஊழியர் கூறுகின்றனர். லோண்ட்ரிகளிலும் சிகையலங்கார நிலையங்களிலும் கூடக் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


**50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்**

**ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.**



**அடுத்து உங்கள் முறை ஆகலாம்**

**50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.**

**அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.**




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல்பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 170; தேதி 30-11-67 புத்தம்புதிய வோக்ஸ் வகன் 1300 கார் ரூ. 12,500/-. ஃ



சீட்டிழுப்பு இல, 170

சீட்டிழுப்பு இல. 171 தேதி 7-12-67 — புத்தம் புதிய இஸுசு பெல்ட் கார் ரூ. 11,750/- ஃ



சீட்டிழுப்பு இல. 171

ஃ இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனிப் பட்டியல் விலைகளாகும்.

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாள்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

**ஞாபகத்திலிருக்கட்டும்:-**

**நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.**

**50 சதம் முதலிடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் தின பேச்சு போட்டி முடிவுகள்

கொழும்பு, திங்.

கொழும்பு விவேகானந்த சபையினரால்நடத்தப்பட்ட நாவலர் தினப் பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

கீழ்ப்பிரிவு செல்வி த.சிவசோதி. செல்வன்க.சீவானந்தராசா. செல்வி இ. தயாபரி

மத்திய பிரிவு செல்வன் கி.நாகேந்திரா.செல்வி ஐ. யோகேஸ்வரி.செல்வி எஸ். விஜயகுமாரி.

மேற்பிரிவு செல்வன் த.சந்திரகுமார். செல்வி தா.இந்திராணி செல்வி அ.செல்லாட்சி,

## சமய அறிவுப்போட்டி முடிவுகள்

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் நடாத்திய சமய அறிவுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

செ. புஸ்பாதேவி, சி.சுந்திரதேவி, ப. இராசகோபாலன், செ. புஸ்பராணி, செ. சபாநாதன் ம. ரேணுகா, நா. காசிவிஸ்வநாதன், க.காந்திமதி, க.நடராசா, சி. பரமேஸ்வரி, ச. தில்லைநாதன், த. புஸ்பமலர், இ. ஈஸ்வரநேசன், க. கனகேஸ்வரி, இ. நளினி, க. விக்னேஸ்வரன், சி.இராசரத்தினம் ந. தேவகல்யாணி, இ. தனலட்சுமி, கா. ஜயந்தி, க. வீமதேவன், ம. சிறிமுருகவேல், ந.மகாலிங்கம் க. முருகரத்தினம், கா சந்திரவரதன், க. பூரணச்சந்திரன்.

## யானைகள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், செவ்.

முல்லைத்தீவு கொக்குதொடுவாயைச் சேர்ந்த முந்திரிகைக்குளம் என்னுமிடத்தில் யானைகளின் அட்டகாசம் விவசாயிகளுக்குப் பெரும் தொல்லையைக் கொடுத்து வருகிறதாம். சென்றசில தினங்களுக்கு முன்னர் கூட்டமாக வந்த யானைகள் இங்குள்ள கமக்காரர்களின் வயல்களை அழித்து நாசம் செய்துவிட்டதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.இது சம்பந்தமாகப் பயிர்ச் செய்கைக் குழுத் தலைவர்கரைதுறைப் பற்றுக் காரியாதிகாரியிடம் புகார் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.


## களை பிடுங்கினர்

புலோலி, திங்கள்

நாகர்கோவிலிருக்கும் நாகேஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சிரமதானத்தின் மூலம் தமது சுற்றுடலிலுள்ள வயல்களில் களை பிடுங்கினர். தலைமையாசிரியர் திரு. அ. அம்பலவியர் களை பிடுங்கலை ஆரம்பித்து வைத்தார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு வேண்டிய உணவுவகைகள் வயல் உரிமையாளரால் வழங்கப்பட்டன. ஃ ஃ ஃ

மல்லாவி, திங்கள்

மாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவ மாணவிகளும்ஆசிரியர்களும் மற்றும் விவசாயஉத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர், மாங்குளம் வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தினர்ஆகியோரும் அண்மையில் உணவு உற்பத்தி இயக்கத்தின்கீழ் களை பிடுங்கும் இயக்கத்தை ஆரம்பித்தனர். இவ்வியக்கத்திற்கு வவுனியா வடக்கு காரியாதிகாரி தலைமை தாங்கினர்.




Mister

மிஸ்டர் ஷவரஞ் செய்வதில் பரம ஆனந்தம். அடுத்து முகஷவரஞ் செய்யும்போது இதை பரீட்சித்துப் பாருங்கள் — இதன் சிறப்பம்சம் தான் என்னே! பல தடவைகள் ஷவரஞ் செய்யும்போதும் சொகுசான, திருப்தியான, வியப்பான செயல்ச் சிறப்பைத் தரும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

ஈ.பி.கிறீஸி அண்ட் கம்பெனி லிமிட்டெட்

தயாரிப்பாளர்கள்

இன்டர்நாஷனல் மனுபக்ஷரஸ் லிமிட்டட்


### யாழ். பாடசாலைகள் உதைபந்து சாம்பியன் போட்டி

# விளையாடாமலே மகாஜனா வெற்றி

## கொக்குவில் இந்துவும் மகாஜனாவும் நாளை மோதுகின்றன

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனாவுக்குமிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் தாம் போட்டியிட விரும்பவில்லை என்றும் போட்டியிலிருந்தும் விலகிக் கொள்வதாகவும் மானிப்பாய் இந்து பாடசாலை உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. வி. ரி. கணேசலிங்கத்துக்கு அறிவித்துள்ளது.

இவ்வறிவித்தலின் பிரகாரம மகாஜனாவுக்கும் மானிப்பாய இந்துவுக்குமான போட்டியில் மகாஜனா விளையாடாமல் வெற்றியீட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சுற்றுப் போட்டியின் முதலாம் பிரிவு 'ஏ' டிவிஷன் சாம்பியன் மோதல் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் கொக்குவில இந்துக் கல்லூரிக்கும் இடையே 29-ம் திகதி நடைபெறும்.

மானிப்பாய் இந்து தனது கடைசிப் போட்டியை விளையாடாமல் வாபஸ் பெற்ற காரணத்தால மகாஜனாவுக்கு முன்னிருந்த 7 புள்ளிகளுடன மேலும் இரு புள்ளிகள் கூடியுள்ளன. எனவே மகாஜனாவுக்கும் கொக்குவில் இந்துவுக்கும் தற பொழுது தலா 9—9 புள்ளிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

29-ம் திகதி 'ஏ' டிவிஷன் சாம்பியன்மோதலை அடுத்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் மகாஜனாவுக்கும் இடையேயான 3-ம பிரிவு சாம்பியன் மோதல் நடைபெறும். இச் சாம்பியன் போட்டிகள் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன. (வி.நி)

குருநகரில்

## விளையாட்டு மைதானம்

யாழ்ப்பாணம், செவ்.

குருநகர் றெக்ளமேஷனில் ஒரு பகுதி விரைவில் பொது விளையாட்டு மைதானமாக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை இப்போது யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

குருநகர் கலைக்கழகத்தினர் நேற்று முன்தினம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளையைச் சந்தித்து இங்கு விளையாட்டு மைதானம் அமைக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி வற்புறுத்தியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ந.நி.

## திறந்து கிடக்கும் தபால்பெட்டி

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் தபால்பெட்டி தினமும் திறந்தபடியே இருப்பதாகவும் இதனால் அப்பகுதியிலுள்ள பொது மக்கள் கடிதம் போடமுடியாமல் அவதியுறுவதாகவும் வாரம் பலவாகியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## குருநாகலில் நாவலர் விழா

யாழ்ப்பாணம், செவ்.

குருநாகல் சைவ மகா சபையின் ஆதரவில்மேற்படி சபைமண்டபத்தில் நாவலர் விழா கொண்டாடப்பட்டது.

தொழில் உதவி ஆணையாளர் திரு. வெ. சர்வலோகநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'ஈழவேந்தன்' 'நாவலரும்நாமும்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர். திரு. சு. நமசிவாயம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. (ந. நி.)

## "சுரண்டலைத் தடுக்க உதவுக"

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலிருந்து சங்கு ஏற்றுமதி செய்வதில் தொழிலாளர்களைச் சுரண்டுவதிலிருந்து முதலாளிகளைத் தடுக்க கிழக்குப் பாகிஸ்தான் கூட்டுறவு இயக்கம் தமக்கு உதவி அளிக்கமுன்வரவேண்டுமென இங்குவிஜயம் செய்த சர்வதேச கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனப் பிரதேச அதிகாரியான டாக்டர் சச்சேனவை வ. இலங்கை கடற்றொழில் கூட்டுஸ்தாபன சமாஜத்தினர் கேட்டுக்கொண்டனர். (ந.நி.

### விபத்து

யாழ்ப்பாணம். செவ்.

கந்தர்மடம் சந்திக்கருகாமையில் நேற்று மாலை இ. போ.ச.பஸ் வண்டியொன்றும் காரொன்றும் மோதிக்கொண்டன. இவ்விபத்தில் எவரும் காயமடையவில்லை. [ந.நி.]

## சங்கிலியன் கழக வெற்றிக் கிண்ணம்

சுழிபுரம்' திங்கள்

வலிகாமம் மேற்கு 2ம் பிரிவு விளையாட்டுக் கழகச் சங்கம் சங்கிலியன் கழக வெற்றிக் கிண்ணத்துக்காக ஓர் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியை நடாத்தவிருக்கின்றது. இப்போட்டியில் சுழிபுரம், தொல்புரம், மூளாய். வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, ஆகிய இடங்களைச் சேர்ந்த உதைபந்தாட்டக் கழகக் கோஷ்டியினரே கலந்து கொள்ளலாமென்றும், இறுதிநாளன்று தெரிவு செய்யப்பட்ட கோஷ்டியினர், யாழ்ப்பாண உதைபந்தாட்டக் கோஷ்டியினருடன் போட்டியிடுவதென்றும் இப்போட்டிகள் அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகுமென்றும் தெரிகிறது.

## 30 லொறிகள் வேண்டுமாம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் துறைமுக சேவையில் இயங்கும் 14 லொறிகளும் இங்கு போதாதனவாக விருப்பதாயும், குறைந்தது 30 லொறிகளாவது இங்கு அவசியம்தேவையாகும் எனவும் இங்கு நடைபெற்ற துறைமுக சேவையாளர் சமாஜ கருத்தரங்கில் பேசுகையில் உதவி உணவுக் கட்டுப்பாட்டுக் காரியாலய அதிகாரி [illegible] தெரிவித்தார். [ந. நி.]


நீங்கள் கேளுங்கள்!




ஈழவள நாட்டிலே எங்குமே கிடைக்கும்!!

யாழ்ப்பாண மாவட்ட ஏஜண்ட்:

என். எம். எஸ். அண்ட் பிறதர்ஸ்,

கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நாணய மதிப்பு குறைப்பு

# 'ஏழைகளின் வயிற்றில் அடி பணக்காரரே பயன் பெறுவர்

## வெளிநாட்டு எஜமானருக்கு அரசாங்கம் பணிந்துவிட்டது'

### பார்லிமெண்டில் பீலிக்ஸ்

கொழும்பு, ஞாயிறு

**ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதினால் ஏழைகள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பணக்காரருக்கு எந்தவித கஷ்டமும் இல்லை. வெளிநாட்டு முதலாளிகளான எஜமானர்களின் கட்டளைக்குப் பணிந்து அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

**இவ்வாறு இன்று பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சி சார்பில் நாணய மதிப்புக் குறைப்பு பற்றி பேசுகையில் தொம்பே எம், பி. யும் முன்னாள் நிதிமந்திரியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா காரசாரமாக அரசாங்கத்தைக் கண்டித்தார்**

நாணயமதிப்புக் குறைப்பைப்பற்றி இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிதிமந்திரி திரு யு. பி. வன்னிநாயக்கா அறிவித்தார்.

திரு. வன்னிநாயக்கா கூறியதாவது:-

நாணயமதிப்பை குறைப்பதற்கு முன்னர் அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்தபின்னரே முடிவுக்கு வந்தது. வெளிநாட்டு ஏற்றுமதி வெகுவாக இறங்கி வந்ததால் நாணய மதிப்புக் குறைப்பு மிக அவசியமாகி விட்டது. இதனால் பொது மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்படாமல் சில நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இலவச அரிசி விநியோகத்திலும் பருப்பு விலைகளிலும் மாற்றம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. விவசாயிகளுக்கு நெல்லின் கொள்முதல் விலை 14 ரூபாயாகக் கூட்டப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியருக்கு சம்பளம் கூட்டப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிசார்பில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விவாதத்தை ஆரம்பித்து வைக்கையில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவே நாணயமதிப்புக் குறைக்கப் பட்டதாக எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் சர்வதேச நாணய நிதியின் உத்தரவுகளுக்கு அரசாங்கம் பணிந்துவிட்டது என்பதே உண்மை. வெளிநாட்டு முதலாளிகளுக்கு அரசாங்கம் பயந்து மண்டியிட்டுவிட்டது மல்லாமல் நமது ஆதிபத்திய உரிமையையே அடகு வைத்து விட்டார்கள் என்றார்.

கடன் வசதிகளுக்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் பணக்காரர்கள் மட்டுமே பயன் பெற்றிருக்கிறார்கள். ஏழைமக்கள் வயிற்றில் அடிக்கப்பட்டுள்ளார்கள். தோட்டங்கள் வைத்திருக்கும் முதலாளிகள் பெரிதும் பயன்பெறுவார்கள். ஆனால் ஏழைகளான விவசாயிகளும் தொழிலாளரும் பெரிதும் கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளனர் என்று திரு. பீலிக்ஸ் கூறினார். வெளிநாட்டு எஜமானர்களுக்கு அரசாங்கம் பணிந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

திரு. ரி. பி. எம். ஹேரத் பேசுகையில் இந்தப்பிரச்னையின் மீது தமது எம். பி. பதவியை அரசாங்க எம். பி. எவரும் ராஜினாமா செய்தால் தாமும் ராஜினாமா செய்வதாகவும், அதன்மீது போட்டியிட முன்வரமுடியுமா என்று சவால்விட்டார்.

அடுத்து திரு. பேர்னார்ட் சொய்சா எம். பி. பேசுகையில் சில காலத்துக்கு முன் இந்தியா செய்துவிட்ட தவறை இப்பொழுது இலங்கை செய்துள்ளது என்றார்.

## சிவசிதம்பரம், நாகநாதன் இருவரும் எதிர்ப்பு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை ரூபாயின் வெளிநாட்டு செலாவணி மதிப்பைக் குறைத்தது பற்றி இன்று அரசாங்க பார்லிமெண்ட் குழு விரிவாக ஆராய்ந்தது நாணய மதிப்புக் குறைப்பை உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனும் வன்மையாகக் கண்டித்தார்கள்.

நாணய மதிப்புக் குறைப்பை எதிர்க்கும் கோஷ்டிக்கு இவர்களே முன்னோடிகளாய் விளங்கினார்கள். இவர்களைத் தொடர்ந்து பல எம். பிக்கள் நாணயமதிப்புக் குறைப்பை எதிர்த்துப் பேசினார்கள்.

பிரதமமந்திரி எதிர்ப்புக் கோஷ்டிக்கு பதிலளிக்கையில் இலங்கையின் பொருளாதார நிலை மோசமாகி விட்டதாகவும், அதனால் நாணயமதிப்பைக் குறைக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாக விட்டதென்றும் கூறினார்.

அரசாங்க ஊழியருக்குப் போலவே தனியார் துறையிலும் சம்பள உயர்வு கொடுக்க வற்புறுத்தவேண்டுமென்றும் மாவு, சீனி, போன்ற பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி அவைகளுக்கான செலவை அரசாங்கம் ஏற்கவேண்டும் என்றும் சில எம். பிக்கள் வற்புறுத்தினார்கள்.

தனியார்துறையில் சம்பள உயர்வு கொடுக்கும்படி வற்புறுத்தவியலாதென்றும் பிரதமர் கூறினார். தனியார்துறையில் சம்பள உயர்வு ஏற்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தும்படி தொழில் அமைச்சர் கேட்டுக்கொள்ளப்பட்டார்-

உணவுப் பொருட்களின் விலைஉயர்வைத் தடுத்து அதனை அரசாங்கம் ஏற்பதானால் நாணய மதிப்புக் குறைப்பின் நோக்கமே பிழைத்துவிடும் என்றும் பிரதமமந்திரி கூறினார்.

---

உள்ளூர்-வெளியூர்

## விமான கட்டணம் உயர்வு

கொழும்பு, ஞாயிறு

உள்ளூர், வெளியூர் விமானக் கட்டணங்கள் யாவும் இன்று முதல் 25 சத விகிதம் உயர்த்தப்படுகின்றது. ஏற்கனவே பிரயாண டிக்கட் 'புக்' செய்திருப்பவர்களும் இந்த அதிகப்படியான கட்டணத்தை செலுத்தவேண்டியிருக்கும்.

## தற்காலிக வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கல்வி அதிகாரியான திரு. சி. ஏ. ஞானசேகரம் வடபகுதி தற்காலிக வித்தியாதிபதியாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார். [ந. நி]

## அவதூறு வழக்குகள்

கொழும்பு. ஞாயிறு

அவதூறு வழக்குகளை பூர்வாங்க விசாரணையின்றி நேரடியாக மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு திருத்தச் சட்டமூலத்தை இன்று நீதிமந்திரி செனட் சபையில் சமர்ப்பித்தார்.

## சீனியில் கலப்படம்: கொள்ளைலாப முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

சீனியின் விலை 5 சதம் கூட்டப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண நகரிலுள்ள பல கடைகளிலும் சீனியில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள கடையொன்றில் நேற்று சீனியை வாங்கிய ஒருவர் அதை வீட்டுக்கு கொண்டுசென்று தேநீர் தயாரித்தபோது, சீனிக்குள் கலக்கப்பட்டிருந்த ஒரு பொருள் தேநீரில் மிதந்ததாக உணவுக் கட்டுப்பாட்டிலாகாவில் புகார் செய்தார்.

இதனைத் தொடர்ந்து அந்தக் கடையில் விற்பனைக்கிருந்த சீனி கொழும்பில் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சகல கடைகளிலுமுள்ள சீனியை எடுத்து பரிசோதனைசெய்யுமாறு நேற்று மாலை இங்கு திடீர் உத்தரவிடப்பட்டுள்ளது. [ந. நி]

## திருமலை செய்திகள்

— நமது நிருபர் —

### தேயிலை ஏற்றுமதி

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை துறைமுகத்துக்கு அண்மையில் தேயிலை ஏற்றுமதிக்காக வந்த 'மினிஸ்தியுஸ்' என்னும் சரக்குக் கப்பலில் 7,777 பெட்டிகளில் அடங்கிய தேயிலை இங்கிருந்து ஏற்றுமதியாக்கப்படவிருந்தது. இத்தொகையிலே 276 பெட்டிகள் நேர காலத்தில் இங்கு வந்து சேராததன் காரணமாக குறைத்து ஏற்றுமதியாக்கப்பட்டது. திருக்கோணமலைத் துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனம் இத்தொழிலைக் கையேற்றதன் பின்பு இங்கு வந்த மூன்றாவது கப்பல் இதுவாகும் என்பதும் ஏற்கனவே வந்த இரண்டு கப்பல்களில் 5 கோடி றாத்தல் தேயிலை ஏற்றுமதியாககப்பட்டு விட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது, நான்காவது கப்பலான 'மஸ்கெலியா' இம்மாதம் 29-ம் திகதி வரஏற்பாடாகியிருந்த போதிலும் மூன்று நாட்கள் முன்னதாகவே வரும் என்றும் அறியப்படுகிறது.

ஃ ஃ ஃ

### தபாலதிபர் ஓய்வுபெறுகிறார்

திருக்கோணமலை தபாலதிபர் திரு. சுப்பையா நாகநாதர் தமது பதவியிலிருந்து ஓய்வுபெறவிருக்கிறார். யாழ்ப்பாணம் கொக்குவிலை சேர்ந்த இவர் தமது 40 வருடகாலச் சேவையின் பின்பு ஓய்வுபெறுகிறார். 1927ம் ஆண்டு பதவியேற்ற இவர் 13 நிலையங்களில் பணியாற்றியிருக்கிறார். 1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ந் தேதியிலிருந்து இவ்வருடம் அக்டோபர் 31ந் தேதிவரை திருமலையில் சேவைசெய்த இவர் இம்மாதம் 1ந் தேதியிலிருந்து ஓய்வுபெறுவதற்கான லீவில் சென்றுள்ளார்.

ஃ ஃ ஃ

### நாள் ஒன்றுக்கு 700தொன் சரக்கு

அக்டோபர் மாதம் 29-ம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 18-ம் திகதி வரையில் திருமலை துறைமுகத்திலிருந்து 7038 தொன் அரிசி இறக்குமதி ஆகியுள்ளது. சீமெந்து 1201 தொன் இறக்குமதியாகியுள்ளது. தேயிலை 4048 தொன் ஏற்றுமதியாக்கப்பட்டுள்ளது. இவற்றின் கணக்குப்பிரகாரம் நாள் ஒன்றுக்கு சராசரி 700 தொன் சரக்கு துறைமுகத்தில் கையாளப்பட்டுள்ளது.

---

### தொழில்நுட்ப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ள இன்ஸ்பெக்டர்களும் சிறு ஊழியர்களும், லைன்ஸ் மன்களும்வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள போதிலும், இங்கு தற்காலிகமாக வேலையாட்களை நியமித்து வேலைகளை வழமை போலச்செய்ய நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகத் தெரிகின்றது.

வழமை போல தபால்விநியோகம், தந்திச் சேவைகள் இங்கு நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி.]

---

### பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழக மாணவர்கள் கூறுகின்றனர்.

அதற்கு முன்னதாக இவர்கள் வைத்தியப்பகுதிக் கட்டிட வளவிலிருந்து ''பிரேத ஊர்வலம்'' நடத்தி வந்து குதிரைப்பந்தய திடல் வளவில் மாபெரும் கூட்டம் நடத்தினர். சவப்பெட்டி, மேளம் முதலியவற்றுடன் ''பிரேத ஊர்வலம்'' நடத்தி வந்தனர். கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையின் 'கொடும்பாவி' கொண்டுவரும் பாவனையில் இவ்வூர்வலம் அமைந்திருந்தது. பிரதமர் டட்லி சேனநாயக்காவைப் போலவும் ஒருவர் தம்மை உடுத்திக்கொண்டு கொடும்பாவியின் பக்கமாக வந்தார்.

சுமார் மூன்று டசன் பொலிஸ்காரர்கள் கல்லூரியின் பிரதான வாயிலின் முன்பு காவல்புரிந்து வருகின்றனர்.

---

### கூட்டுறவு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. யு. பீ. வன்னி வைத்து விரைவில் இப்பிரச்னையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர முயற்சிகள் செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 2-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org